IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# The Morality Of Jainism in Padumayar Ilampaga

*Dr.S.Kalaivani*

Assistant Professor, Research Department of Tamil, Madurai Sivakasi Nadars Pioneer Meenakshi Women's college, Poovanthi, Sivagangai(Dt.,)



## பதுமையார் இலம்பகத்தில் சமணர்களின் இறைநெறிக் கோட்பாடு

முனைவர் ச.கலைவாணி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் ஆய்வியல் துறை,
மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர்
மீனாட்சி பெண்கள் கல்லூரி, பூவந்தி.

## Abstract:

Episcopal literature mainly looks at theological principles. A field study was conducted on the goal and religious policies were considered. Jains are non-violent. They are non-violent. They saw the Lord. That there is no God, but the human soul believed to live an ascetic life without attachment to nothing, its belief in reincarnation according to life, all life. No harm, no killing, no grazing. In the study of the Jains' system as a moral principle are emphasized. Jains worshiped the Lord in idol form. Jains followed the practice of visiting the temple and worshiping the Lord. It is the way of research is known.

**(Key Words) :**

**1. Theivadham – Pentheivam**

**2. Thankayam – Kulirntha Kulam**

**3. Anithagai Udambu – Azhaginai Thannidathe Adakkiya Theiva Udambu**

**4.Palmadai – Parchoru**

**5.Pinikulam - Noithiral**

சீவக சிந்தாமணி என்னும் செந்தமிழ்க் காப்பியம் திருத்தக்கத் தேவர் என்னும் சமண முனிவரால் இயற்றப்பெற்றதாகும். இவர் வாழ்ந்த காலமும் இடமும் நிச்சயமாகத் தெரியவில்லை என்றாலும் இவர் சோழர் குலத்திலே தோன்றியவர் என்றும், இவருடைய காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும், ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வாழ்ந்த காலமும் இடமும் ஏதாயினும், வளர்த்த சமயமும் கொள்கையும் எதுவாயினும், சீவக சிந்தாமணி எனும் செந்தமிழ் காப்பியம் பாடிய திருத்தக்க தேவரின் புகழ் காலம் கடந்து நிற்கிறது.

ஐம்பெருங்காப்பியங்களில் விருத்தப்பாவால் அமைந்த முதல் காப்பியம் என்ற பெருமைக்குரியது சீவக சிந்தாமணி. கம்பனின் கற்பனைத் திறனுக்கு அடித்தளமாக அமைந்து உதவியது இச்சிந்தாமணி காப்பியமே என்கின்றனர் அறிஞர்கள். தேவியர் எண்மரைக் காவியத் தலைவன் சீவகன் தான் மணந்ததோடு, கோவிந்தையைத் தன் நண்பன் பதுமுகனுக்கு மணம் செய்துவைத்த சிறப்பாலும், காப்பிய முழுதும் காதலறமும் வாழ்க்கை நலமும் பொழியப் பொழிய பாடிய பாடல்கள் நிறைந்து மிகுந்திருப்பதாலும் இக்காப்பியம் 'மணநூல்' என்று அழைக்கப்பெறுகிறது.

சீவக சிந்தாமணியின் உட்பிரிவுக்கு 'இலம்பகம்' என்று பெயர். அதற்கு மாலை என்பது பொருள். நூலில் மொத்தம் பதிமூன்று இலம்பகங்கள் உள்ளன. அவை தவிரக் காப்பியத்தின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பதிகம் ஆகியவை உள்ளன. 3145 பாடல்கள் உள்ளன.

சீவக சிந்தாமணியின் ஐந்தாவது இலம்பகமாக அமைவது 'பதுமையார் இலம்பகம் சுதஞ்சணுடன் சென்ற சீவகன் பல நாடுகளும் சென்று இனிய காட்சிகள் பலவும் கண்டதோடு, காமனும் மயங்கப் பாடும் இன்குரல் தருவதும், பாம்பு முதலியவற்றின் கொடு நஞ்சைப் போக்குவதும், கருதிய உடம்பு பெறுவதுமாகிய மூன்று மந்திரங்களைத் தெரிந்துகொண்டு, அரணபாதம் எனும் மலையை அடைந்து அருகக்கடவுளை வாணங்கினான். பின்னர் சந்திராபம் எனும் நகரை அடைந்து அந்நகரத்தரசன் தனபதியின் மகள் உலோகபாலனுக்கு நண்பனாகி, அவனது தங்கையின் பாம்பு தீண்டிய விஷத்தைப் போக்கி, அவளை மணந்து, பல நாடுகளைக் காணும் ஆவலில் பதுமையை ஒரு நாள் இரவில் பிரிந்து செல்கிறான். இதனோடு இவ்விலம்பகம் முற்று பெறுகிறது. இவ்விலம்பகத்தின் வாயிலாக சமணத்தின் இறைநெறிக் கொள்கையை ஆராய்வது இக்கட்டுரை.

**1.1.சமண சமயம் :**

தனிமனிதனைக் கடந்து உணர்த்தி நிற்கும் அண்டத்தை அல்லது ஒன்றை (கடவுள், இறைவன்) உணரும் வழிமுறையின் கட்டமைப்பே சமயம் ஆகும். “சமயம் என்பது வாழ்வின் பல்வகைச் சூழ்நிலைக்கும், ஆன்மீக வளர்ச்சியின் பல்வேறு நிலைக்கும் ஏற்ப மனிதன் தன் நடத்தையை அமைத்துக் கொள்ள உதவியாய் அமைந்த கருதுகோள்”[1] என்கிறது விக்கிப்பீடியா. தமிழர்கள் முற்காலம் தொட்டே பல்வேறு சமய மரபுகளை பின்பற்றியதற்கு ஆதாரங்கள் உள்ளன. பௌத்தம், சமணம், இந்து (சைவம், வைணவம்), இஸ்லாம், கிறித்தவம் ஆகிய பல்வேறு சமய மரபுகளை பின்பற்றி வந்துள்ளார்கள். அங்ஙனம் சமண சமயமும் தமிழகத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

“சமணம் என்பது பண்டைய இந்தியாவில் நிலவிய சில சமயக்கோட்பாடுகளைக் குறிக்கும். சமணம் என்ற சொல் ச்ரமண என்ற வடமொழிச் சொல்லின் சிதைவு. ச்ரமண என்றால் தன்னை வருத்துகை என்று பொருள்”[2]

என்று வில்லியம்ஸ் குறிப்பிடுகின்றார். கி.பி.12 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சில குழப்பங்களால் சமணம் என்ற சொல் சமண சமயத்தை மட்டும் குறிக்க தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டது. ஆனால் சாவகர், அருகர், ஆசீவகர் ஆகிய மூவரையுமே சமணர் என பண்டைய தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் அடையாளப்படுத்துகின்றனர். இதனை,

“சாவகர் அருகர் சமணர் ஆகும்
ஆசீ வகரும் அத்தவத் தோரே”[3]

என்கிறது திவாகர நிகண்டு. பிங்கல முனிவரும் பிங்கல நிகண்டிலும் இவ்வாறே குறிப்பிடுகின்றார்.

**1.2.சமண சமயக் கொள்கைகள் :**

சமணர்களின் கொள்ளை அகிம்சையாகும். இச்சமணக் கொள்கைகளைக் கொண்டோரில் இரு பிரிவினர் இருந்தனர். திகம்பரர் - துறவை மேற்கொண்டு அதனை நேர்மையாக கடைபிடித்து கோட்பாடு மாறாமல் இருக்கும் ஆண்களுக்கு மட்டுமே மோட்சம் கிட்டும். பெண்கள் இளகிய மனத்தின் காரணமாக பந்தமும், பாசமும் சூழ்ந்தவர்களாக இயல்பாகவே இருப்பதால் பெண்களுக்கு மோட்சம் கிட்டாது. பெண்கள் மறுபிறவி எடுத்து ஆணாகப் பிறந்து துறவை மேற்கொண்டு அதனை நேர்மையாகக் கடைபிடித்து கோட்பாடு மாறாமல் இருக்கும் போதே அவர்களுக்கு மோட்சம் கிட்டும் என்ற கொள்கை உடையவர்கள். சுவேதாம்பரர் - பெண்கள் துறவு மேற்கொண்டு இப்பிறவியிலேயே மோட்சம் பெறலாம். ஆண், பெண் என்ற பேதம் மோட்சம் என்ற கதியை அடைய தடையில்லை என்ற கொள்கை உடையவர்கள்.

ஆன்மா விட்டு கர்மங்கள் நீங்குதன் என்பதே மோட்சம். இது நிர்வாண நிலை என்றும் சொல்லப்படும். நிர்வாணம் என்றால் குளிர்வடைதல் என்பது பொருளாகும். மூவுலகை வென்றதன் அடையாளமாக முக்குடைகள் அமைகின்றன. இம்முக்குடைக்கு கீழ் அமர்ந்திருப்பவரே சமணர்களின் இறைவனாகிய அருகதேவன் ஆவார்.

மனித ஆன்மாவைத் தவிர வேறு கடவுள் இல்லை. கடுந்தவம், பட்டினி போன்றவற்றின் மூலம் நிவாண நிலையை அடைவது. எதிலும் பற்றில்லாத துறவற வாழ்க்கை வாழ்தல், நமது வாழ்க்கைக்கேற்ப மறுபிறவி உண்டு. மனிதர்கள் அனைவரும் சமம். சாதிகள் கிடையாது. பொய்கூறுதல், திருடுதல், பிற உயிரைக் கொல்லுதல் போன்ற பாவங்களைச் செய்யாதிருத்தல் ஆகியவை சமணத்தை கொள்கை ஆகும். இதுவே அவர்கள் மேற்கொள்ளும் இறைநெறியாகும்.

**1.3.1. இறைநெறி :**

வழிபாடு என்பது பின்னிற்றல் எனும் பொருளுடையது. வழி– பின், பாடு – படுதல், நிற்றல். அதாவது வழிபற்றுதல் எனப் பொருள்படும். ஆயினும் இது உடலால், மனதால், கொள்கையால் (அறிவால்) பிற்பற்றுவதைக் குறிப்பதாகும். இதுவே இறைநெறி எனப்படும். திருத்தக்க தேவர் இன்பச் சுவை ததும்ப காப்பியத்தைப் பாடியிருப்பினும், அவரது இறைநெறிக் கொள்கை காப்பிய முழுமையும் ஆங்காங்கே வெளிப்படவே செய்கிறது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதற்கிணங்க சான்றாக ஓர் இலம்பகத்தை மட்டும் இங்கு கூறலாம்.

**1.3.1.1.பதுமையார் இலம்பகத்தில் இறைநெறி :**

மனிதன் ஒழுக்கத்தை வளர்க்க பக்தியை நாடினான். பக்தியானது சாந்தம்,ஞானம்,ஈகையை வளர்ப்பது. பக்தியைப் புகட்டும் எளிய பாடம் இறைநெறி. நாம் செய்த பாவங்களுக்கான தண்டனையாக இந்த பிறவியில் பல துன்பங்களை அனுபவித்தே ஆகவேண்டும் என்று கூறுவதே இறைநெறி. இத்தகைய இறைநெறியினை பதுமையார் இலம்பகத்தில் காணலாம்.

**1.3.1.1.1.மறுபிறவி :**

சமணர்களின் முக்கிய கொள்கை மனிதன் தான் செய்யும் பாவ புண்ணியங்களுக்கேற்ப மறுபிறவி எடுப்பர் என்பதாகும். பதுமையார் இலம்பகத்தில் இக்கொள்கை பல இடங்களில் சுட்டப்படுகின்றது. இலம்பகத்தின் தொடக்கத்திலேயே சுதஞசணன் அறிமுகத்திலேயே இக்கொள்கை வலியுறுத்தப்படுகிறது.

“பிணிக்குலத் தகவயிற் பிறந்த நோய்கெடுத்து
அணித்தகை யுடம்பெனக் கருளி நோக்கினான்”[4]

விலங்கினத்தில் பிறந்த எனது துன்பத்தைப் போக்கி இத்தேவருடல் பெறச் செய்தான் என்று தான் சென்ற பிறவியில் நாயாகப் பிறந்த வரலாற்றை இயம்புவதன் மூலம் மறுபிறவி கொள்கையை அறியலாம். மேலும் அரணபாதம் எனும் மலைக்குச் செல்லும் வழியில் வேடன் ஒருவனைக் கண்டு அவன் உண்ணும் உணவினைப் பற்றி வினவும்; சீவகன், வேடன் ஊன் உணவு உண்பதை அறிந்து,“ ஊனொடு தேனுங் கள்ளு முண்டுயிர் கொன்ற பாவத் தீனராய்ப் பிறந்த திங்ங னினியிவை யொழிமி னென்ன”[5] முன்பு உயிர்களைக் கொன்ற பாவத்தால் தான் இப்பிறவியில் உயிர்களைக் கொல்லும் இழிதொழில் செய்யும் வேடனாய் பிறந்துள்ளாய் என்று கூறுகிறான்.

**1.3.1.1.2.துறவறம் :**

மனிதனாய் பிறந்த ஒவ்வொருவரும் மோட்சம் அடைய கடைபிக்க வேண்டியது துறவறத்தை மேற்கொள்ள வேண்டும். இல்லற வாழ்வில் ஈடுபட்டாலும், துறவறம் மேற்கொண்டு மோட்சம் அடையலாம் என்கிறது சமணம். இக்கருத்தை வலியுத்தும் நூலே சீவக சிந்தாமணி. துறவறத்தின் மேன்மையை பதுமையார் இலம்பகம் பல இடங்களில் எடுத்துரைக்கின்றது. சந்ரோதயம் எனும் மலையிலிருந்து இரண்டு காத தூரம் சென்றால்,

“ தம்வினை கழுவு கின்றார் சாரணர் தரணி காவல்
வெம்மையி னகன்று போந்து விழைவறத் துறந்து விட்டார்
சிந்தையிற் பருதி யன்னார் சேவடி யிறைஞ்ச லோடும்”[6] அரணபாதம் எனும் மலையின் அடிவாரத்தில் தொடரும் தம் இருவினைப் பயன்களையும் போக்குகின்றவராகிய சாரணர், உலகப் பற்றினை விட்டு வந்து வீட்டுலகம் அடைகின்ற வேட்கையால் தம் உள்ளத்து அவாவினையும் விட்டொழித்து வாழ்கின்றார். அவர்களின் திருவடிகளை வணங்கவேண்டும் என்று சுதஞ்சணன் கூறுவதாக அமைகிறது இப்பாடல். இப்பாடலில் உலகப் பற்றினை விட்டு துறவறம் பூண்டவர் வீட்டுலகம் அடைவர் என்பது கருத்தாகக் கூறப்பட்டுள்ளது. இதுவே சமணர்களின் இறைநெறிக் கொள்கையாகும்.

**1.3.1.1.3.கொல்லாமையும் புலால் உண்ணாமையும்** :

பிற உயிரைக் கொல்லாமை என்பது ஓர் அறம். இங்ஙனம் கொல்லாமையைக் கடைபிடிப்பதே இறைவனைச் சேரும் வழி என்கிறது சமணம். பிற உயிரைக் கொன்று புலால் உண்டால் நரகத்தில் வீழ்வது நிச்சயம் என்றும் சமணம் குறிப்பிடுகின்றது. மலையில் வாழும் வேடனிடம் உரையாடும் சீவகன் புலால் உண்ணுவதால் இழிபிறப்படைவர் என்று மறுபிறப்பு பற்றிய நம்பிக்கையைக் கூறுகிறான். அதனோடு உயிர்களைக் கொன்று உண்ணுவதால் நரகத்தில் விழுவர் என்றும் கூறுகிறான்.

“ ஊன்சுவைத் துடம்பு வீக்கி நரகத்தி லுறைதல் நன்றோ
ஊன்றினா துடம்பு வாட்டித் தேவரா யுறைத னன்றோ
ஊன்றியிவ் விரண்டி னுள்ளு முறுதிநீ யுரைத்தி டென்ன”7

இறைச்சியை உண்டு உயிரை வளர்த்து, உடலைப் பெருக்கி நரகத்தில் வாழ்வது நல்லதா? ஊன் உணவை விட்டொழித்துத் தேவராய் வானுலக வாழ்வு பெற்று இருப்பது நல்லதா? இவ்விரண்டையும் ஆராய்ந்து நீ உன் உள்ளத்தில் நல்லதெனப் பட்டதைச் சொல்லி விடு என்று சீவகன் வேடனிடம் கேட்கிறான். இதன் மூலம் கொல்லாமையும், புலால் உண்ணாமையும் மோட்சத்தில் சேர்க்கும் என்பது சமணர்களின் இறைநெறிக் கொள்கையாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.

**1.3.1.1.4.ஆசையை நீக்குதல் :**

ஆசையே துன்பத்திற்கு காரணம். ஐம்புலன்களை அடக்கினால் ஆசையை நீக்கலாம். ஆசையை நீக்குதலையும், ஐம்புலன்களை அடக்குதலையும் கடைபிடித்து நித்தியத்துவத்தை அடைய விரும்புவர்கள் சமணர்கள். இது சீவகனின் இறைவழிபாட்டில் வெளிப்படுவதைக் காணலாம்.

" பாத கமலந் தொழுவேங்கள் பசையாய் பவிழப் பணியாயே"[8]

பிறவியில் உழல்வதற்குக் காரணமாகிய ஆசைத் தொடர்பற அருள்புரிவாய் என்றும்,

" பொன்னா ரிஞ்சிப் புகழ்வேந்தே பொறியின் வேட்கைக் கடலழுந்தி
ஒன்னா வினையி னுழல்வேங்க ளுயப்போம் வண்ண முரையாய"[9]

புகழ்மிக்க பெரியோனே ஐம்பொறி இன்பங்களால் வரும் ஆசையாகிய கடலில் மூழ்கி, பொருந்தாத தீவினையில் உழல்கின்ற நாங்கள் பிழைத்துய்யும் வழியை அருள்வாய் என்றும் வழிபடுகிறான் சீவகன். மேலும் ஆசையே காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று துன்பங்களுக்கும் காரணம். இம்மூன்றையும் நீக்கினால் அங்கம், பூர்வம், அதி என்ற மூன்று ஆகமங்களின் உண்மையை அறியலாம் என்பதை,

" மூன்று கடிமதிலுங் கட்டழித்த காவலனீ யன்றே
முரணவிய வென்றுலக மூன்றினையு மூன்றித்
றரணிமேற் றந்தளித்த தத்துவன்றான் யாரே"[10]

என்ற பாடல் அடிகள் மூலம் விளக்குகிறார் திருத்தக்க தேவர். இவ்வழிபாட்டில் ஆசையை நீக்குவதையும், ஐம்புலன் அடக்குதலையும் சீவகன் எடுத்துரைப்பதன் மூலம் சமண முனிவரான திருத்தக்கதேவரின் சமணக் கொள்கை வெளிப்படுகிறது.

**1.3.1.1.5.கோயில் வழிபாடு :**

சமணர்கள் கோயில் வழிபாட்டிலும், உருவ வழிபாட்டிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். இவர்கள் இறைவனை அருகதேவன் என்றனர். பதுமையார் இலம்பகத்தில் சீவகன் அரணபாதம் எனும் மலையை அடைந்து அங்குள்ள சாரணர்களை வணங்கி, அருகன் அமர்ந்துள்ள கோயிலை வலம் வந்து பாடல் பாடி வழிபடுகிறான். இதனை,

" தனிமுதிர் கடவுள் கோயில் தான் வலங் கொண்டு செல்வான்"[11]

என்ற அடி உணர்த்துகின்றது. மேலும் கோயிலிலுள்ள திருவுருவத்தின் பாதங்களில் பூக்களைக் கொண்டு பாடல் மூலம் அர்ச்சித்து வழிபடும் வழக்கமும் சமணர்களிடம் இருந்துள்ளதை,

" தண்கயக் குற்ற போதுந் தாழ்சினைஅயிளிந்த வீயும்
வண்கொடிக் கொய்த பூவும் வார்ந்துமட் டுயிர்ப்ப வேந்தித்
திண்புக ழறிவன் பாதத் திருந்துகைத் தலத்தி னேற்றிப்
பண்புகொள் குணங்கொள் கீதம் பாணியிற் பாடு கின்றான்"[12]

என்ற பாடல் தெளிவுபடுத்துகின்றது. உருவ வழிபாடு இருந்துள்ளதை,

" உலக மூன்று முடையோய்நீ யொண்பொ னிஞ்சி யெயிலோய் நீ
கொலையி லாழி வலனுயர்த்த குளிர்முக் குடையி னிழலோய்நீ"[13]

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. இதில் பொன் மதில் கோட்டம் உடையவன் என்றதால் கோயில் வழிபாடு இருந்துள்ளதை அறியமுடிகிறது. தருமச் சக்கரத்தை வலப்புறத்தில் ஏந்தி, முக்குடை நிழலில் உறைபவன் என்பதால் அருகதேவன் கையில் சக்கரம் ஏந்தி முக்குடைக்கு கீழ் அமர்ந்துள்ள உருவம் என்பதும் புலனாகிறது.

**1.3.1.1.6.பெண்தெய்வ வழிபாடு :**

சமணர்களிடம் பெண்தெய்வ வழிபாடும் வழக்கில் இருந்ததை பதுமையார் இலம்பகம் இரு இடங்களில் சுட்டிக் காட்டுகின்றது. சுதஞ்சணன் சீவகனுக்கு வழி கூறும் பொழுது, அரணபாத மலையில் உள்ள சாரணரை வணங்கித் தொழுதவுடன், இயக்கி என்பவள் தோன்றி, முதூட்டுவாள் என்று கூறுகிறான்.

" வெந்திற லியக்கி தோன்றி விருந்தெதிர் கொண்டு பேணித்"[14]

இப்பாடல் அடியினைப் படிக்கும் போது இவள் ஒரு பெண் என்று தோன்றும்;. ஆனால் இவ்வியக்கியைப் பற்றி,

" வெம்மலைத் தெய்வதம் விருந்து செய்தபின்"[15]

என்ற அடி விளக்குகின்றது. இதில் மலைத் தெய்வதம் என்று கூறுவதிலிருந்து இயக்கி மலையில் வாழும் பெண் தெய்வம் என்பது புலனாகிறது. இதற்கு சான்றாக சிலப்பதிகார அடைக்கலக் காதையில் அறவணஅடிகள் மாதரியை அறிமுகம் செய்யும் இடத்தில்,

“ புறம்சிறை மூதூர் பூங்கண் இயக்கிக்குப்
பால்மடை கொடுத்துப் பண்பில் பெயர்வோள்”

என்று அறிமுகப்படுத்துவதைக் கூறலாம். இங்கும் இயக்கி பெண்தெய்வமாக, அதிலும் சாரணராகிய சமணர் அறிமுகப்படுத்துவதாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இன்றும் இவ்வழிபாடு நாட்டுப்புற சிறுதெய்வமான இசக்கி அம்மனாக வழிபடுவதைக் காணமுடிகிறது.

- சீவக சிந்தாமணி மணநூல் என்று அழைக்கப்பட்டாலும், திருத்தக்க தேவர் சமணமுனிவர் என்பதால் சமண சமயக் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன.
- சமண சமயம் பண்டைய காலம் தொட்டு தமிழகத்தில் இருந்துள்ளது. முதலில் கோட்பாடாக இருந்து பின் சமயமாக மாறி இருக்கிறது என்பதை அறியமுடிகிறது.
- துறவறம், மறுபிறப்பு, ஆசையை ஒழித்தல், கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவற்றை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டே இறைநெறி எனும் இறை வழிபாடு ஆரம்பமாகிறது.
- கோயில் வழிபாடும், உருவ வழிபாடும், பெண்தெய்வ வழிபாடும் சமணத்தில் இருந்துள்ளது. இவை இன்றைய வழிபாட்டிற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

அடிக்குறிப்பு:

1. தமிழ் விக்கிப்பீடியா.
2. Sanskrit – English Dictionary P.1096
3. திவாகர நிகண்டு
4. பதுமை.1172
5. பதுமை.1234
6. பதுமை.1177,78
7. பதுமை.1235
8. பதுமை.1242
9. பதுமை.1243
10. பதுமை.1245,46
11. பதுமை.1240
12. பதுமை.1241
13. பதுமை.1178
14. பதுமை.1248
15. சிலம்பு. 15:116-117

**Bibliography**

1. Seevaga Chinthamani Moolamum Uraiyum – G. Manikkavasagan (Urai) – Manivasagar Pathipagam.
2. Silapathigaram Moolamum Uraiyum – Sa.Ve. Subramaniyan (Urai) – Gangai Book Shop.
3. Sanskrit – English Dictionary – Williams – Oxford University Publication.
4. Dhivagara Nigandu.
5. Tamil Wikipedia.